POP : 20/2023

நாள் : 22.04.2025

ம.சா. : 3

பெயர் : ராஜன்

**1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க சம்மன் வரவில்லை என்றால் சரி. நான் மனுதாரர் உமாசாந்தி அழைத்ததன்பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரி. நான் மனுதாரர் உமாசாந்தியின் கணவர் என்றால் சரி. நான் MTC போக்குவரத்துகழகத்தில் நடத்துனராக பணிபுரிகிறேன் என்றால் சரி. எதிர்மனுதாரர்கள் என் மனைவியின் உடன்பிறந்த அக்காவின் குழந்தைகள் என்றால் சரி. என் மனைவியின் அக்கா அலுமேலு மங்கை இறந்துவிட்டார் என்றால் சரி. அலமேலு மங்கையின் கணவர் கோவிந்த ராஜ் உயிருடன் தான் இருக்கிறார் என்றால் சரி. அலமேலு மங்கையின் கணவர் கோவிந்தராஜை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி. மனுதாரரின் தாயார் எழுதி வைத்ததாக சொல்லும் உயிலில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரி. என்னுடன் ராமு, தனஞ்ஜெயன் ஆகியோர் வேலை செய்துவருகிறார்கள் என்றால் சரி. அவர்கள் தான் இந்த உயிலில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரி. மனுதாரரின் தாயார் வாலாம்பாள் எந்த உயிலும் எழுதிவைக்கவில்லை என்றால் சரியல்ல. எழுதி வைத்தார். அந்த உயில் என்னுடன் வேலை செய்யும் ராமு தனஞ்ஜெயன் நான் என் மனைவி ஆகியோர் சேர்ந்து மோசடியாக தயார் செய்த உயில் என்றால் சரியல்ல. வாலாம்பாள் இறந்தபிறகு மோசடியாக தயார் செய்த உயில் என்பதால் தான் அந்த உயிலை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. உயிலை Probate செய்ய போனபோது தான்

S. Rajan

எதிர்மனுதாரர்கள் வழக்கு போட்டிருப்பது தெரியவந்தது. அதுவரை எந்த சம்மனும் எங்களுக்கு அந்த வழக்கிலிருந்து வரவில்லை. நான் மனுதாரரின் கணவர் என்பதால் அவருக்கு சாதகமாக சாட்சியமளிக்க வந்தேன் என்றால் சரியல்ல.

S. Raja

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

22/4/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

22/4/25